# முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு

# மதுரை கிழக்குத் தொகுதி சார்பில் பிரமாண்ட ஜல்லிக்கட்டு!

## அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில் நடைபெற்றது!









கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி சார்பாக மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில் பிரம்மாண்டமான ஜல்லிக்கட்டு விழா அலங்காநல்லூர் கீழக்கரையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், அரசு அதிகாரிகள், பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள், மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

### முதல்வர் பிறந்த தினத்தை முன்னிட்டு அலங்காநல்லூர் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில்

## ஆறு நாட்கள் பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு போட்டிகள்!

### அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, ஜன.26–

தி.மு.க. தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த தினத்தை முன்னிட்டு அலங்காநல்லூரில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் அடுத்தடுத்து ஆறு நாட்கள் பிரம்மாண்டமான ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளதாக வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தனது அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார் அதன் விபரம்

எல்லோருக்கும் எல்லாம் எனும் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழர்களின் பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டு விழாவை உலக அளவில் பெருமை சேர்க்கும் வகையில் அலங்காநல்லூர் கீழக்கரை கிராமத்தில் உலக தரத்தில் பிரம்மாண்ட கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை அமைத்துக் கொடுத்தார்

இந்த அரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு பிரம்மாண்ட ஜல்லிகட்டு போட்டிகள் நடைபெற உள்ளன



அதன்படி வருகிற 27.01.2026ஆம் தேதி மதுரை கிழக்கு தொகுதி திமுக சார்பாகவும், அதே போன்று 29.01.2026 மதுரை மேற்கு தொகுதி திமுக சார்பாகவும், 31.01.2026 மதுரை மேலூர் தொகுதி திமுக சார்பாகவும், பிப்ரவரி மாதம் 2ஆம் தேதி சோழவந்தான் தொகுதி தி.மு.க. சார்பாகவும், 05ஆம் தேதி உசிலம்பட்டி தொகுதி திமுக சார்பாகவும், 9ஆம் தேதி திருப்பரங்குன்றம் தொகுதி தி.மு.க. என தொடர்ந்து ஆறு நாட்கள் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளன

அனைத்து ஜல்லிக்கட்டு போட்டிகளும் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடைபெறும். இந்த ஜல்லிக்கட்டில் அந்தந்த தொகுதியைச் சேர்ந்த ஜல்லிக்கட்டு காளைகளுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்பட உள்ளது, மேலும் விழாவில் பங்கேற்று சிறப்பாக விளையாடும் ஜல்லிக்கட்டு காளைகளுக்கும், அவற்றினை மடக்கிப் பிடிக்கும் காளையர்களுக்கும் சிறப்பு வாய்ந்த பரிசுகள் வழங்கப்பட உள்ளன .

இதில் கழக நிர்வாகிகள், கழகத்தினர், ஜல்லிக்கட்டு காளை வளர்ப்போர், மாடுபிடி வீரர்கள், பொதுமக்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

## கோவையில் மருத்துவ முகாம்!

கோவை, ஜன.26–

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி நகராட்சி மஹாராஜா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் க.ஈஸ்வரசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர் ஆகியோர் பயனாளி களுக்கு மக்களைத்தேடி மருத்துவப் பெட்டகம் மற்றும் மகப்பேறு தாய்சேய் நலப் பெட்டகம் ஆகியவற்றினை வழங்கினர். இதில் பொள்ளாச்சி சார் ஆட்சியர் ராமகிருஷ்ணசாமி, நகர கழக செயலாளர் நவனீதகிருஷ்ணன், நகர்மன்றத் தலைவர் சியாமளா நவனீதகிருஷ்ணன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பாலுசாமி உள்பட பலர்பங்கேற்றனர்.

## தி.மு.க. தொண்டர் அணி

### மதுரை மாநகர் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தொண்டர் அணிச் செயலாளர் பெ.சேகர் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் -ஒப்புதலோடு மதுரை மாநகர் மாவட்ட தொகுதி மறுசீரமைக்கப்பட்டதால், ஏற்கனவே மதுரை மாநகர் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட ஜீ.முத்துகிருஷ்ணன் அவர்கள் மறைவெய்தியதாலும் மற்றும் எம்.ஜெகநாதன், பி. முனீஸ்வரன், ஆர். ஜெயசந்திரன், டி. முரளிதரன் ஆகியோருக்கு பதிலாக, **எம். நாகேந்திரன்** (41, ஜி.ஜி. ரோடு, சுந்தராஜபுரம், மதுரை), **கே.பாஸ்கரன்** (8, மகபூப்பாளையம், அன்சாரி நகர், மதுரை), **எஸ்.இப்ராகிம்** (1, பள்ளிவாசல் தெரு, கோரிப்பாளையம், மதுரை- 2), **எம். கார்த்திக்** (23, அய்யனார் கோவில் தெரு, செல்லூர், மதுரை), **இ. ஜெயராமன்** (தியாகி பாலு தெரு, மதுரை-2) ஆகியோர் மதுரை மாநகர் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 24-01-2026.

**மாஸ்டர் பெ.சேகர்,**
செயலாளர்
தி.மு.க. தொண்டர் அணி

### மதுரை மாநகரில் ஆர்.ரவீந்திரன் தலைமையில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

## பேராசிரியர் சாலமன் பாப்பையா குழுவினரின் சிறப்பு பட்டிமன்றம்!

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார் !

மதுரை,ஜன.26–

மதுரை மாநகர் மாவட்ட திமுக வடக்கு சட்டமன்ற தொகுதி செல்லூர் பகுதி 25வது வட்டம் பீபீகுளம் கலைஞர் அறிவாலயம் சார்பாக கழக இளைஞரணி செயலாளர் துணை முதல் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மாநில பொதுக்குழு உறுப்பினர் டி.ஆர்.இரவீந்திரன் தலைமையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம் எல் ஏ வழங்குகி, பேராசிரியர் சாலமன் பாப்பையா குழுவினரின் சிறப்பு பட்டிமன்றத்தை துவக்கி வைக்கிறார், அதன் விபரம்

கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தின விழா, சமத்துவ சமூக நீதிப் பொங்கல் விழா, மகளிர்க்காண நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் விழா, இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா மற்றும் பேராசிரியர் சாலமன் பாப்பையா குழுவினரின் மாபெரும் பட்டிமன்றம் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது

இந்நிகழ்ச்சிக்கு கழக பொதுக்குழு உறுப்பினர் டி.ஆர். ரவீந்திரன் தலைமை வகிக்கிறார்

செல்லூர் பகுதி செயலாளர் டி.ஏ.குரும்பன் வரவேற்புரை நிகழ்த்துகின்றார்

கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு ஆகியோர் கழகத்திற்காக அரும்பாடுபட்ட கழக முன்னோடிகள் புகைப் படங்களை திறந்து வைத்து அவர்களின் குடும்பத்தாருக்கு நிதி உதவி வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்

மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களது தலைமையிலான பட்டிமன்றத்தை துவக்கி வைக்க உள்ளார்

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துரை கோபால்சாமி மாணவ, மாணவியருக்கு மடிக்கணிணிகளும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.ஆர்.சௌந்தரராஜன் விளையாட்டு உபகரணங்கள் வழங்க உள்ளார்

இந்நிகழ்ச்சிக்கு கழக நிர்வாகிகள் மாயன் பெருமாள், முரளி கணேஷ், அண்ணாதுரை, செ.போஸ், ராமு, வீரத்துறை, தமிழ்சந்திரன், கண்ணன், மகாலிங்கம், மணிகண்டன், ஆனந்தராஜ், ஜான்சன், நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளனர்

மேலும் தலைமை செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம், மாவட்ட கழக நிர்வாகிகள் ஒச்சுபாலு, தனச்செல்வம், மூவேந்திரன், சின்னம்மாள், ராகவன், முருகவேல் மற்றும் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்க உள்ளனர்

சிறப்பு மிக்க இந்நிகழ்ச்சி வரும் 29.01.2026 வியாழக்கிழமை மாலை 5 மணி அளவில் பீ.பீ குளம் காமராஜர் இரண்டாவது தெருவில் கலைஞர் அறிவாலய வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது

இந்நிகழ்வின் முடிவில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பாலு, கலைஞர் அறிவாலயம் சிவக்குமார், ராஜேந்திரன் ஆகியோர் நன்றியுரையாற்ற உள்ளனர்

### கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான

## ‘தி.மு.க.தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு’ நெல்லை வருகை!

### மத்திய -மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. அறிக்கை!

நெல்லை,ஜன.26–

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

2011 முதல் பத்தாண்டு காலம் இருண்டு கிடந்த தமிழ்நாட்டை மீட்டெடுத்து “எல்லோருக்கும் எல்லாம்” என ஒளிமயமான பாதையில் தமிழ்நாட்டை பயணிக்கச்செய்து, வளர்ச்சியில் முதல் மாநிலமாக உயர்த்தியிருக்கும் திராவிட மாடல் அரசு கடந்த தேர்தலில் அளித்த 505 வாக்குறுதிகளில் 404 க்கும் மேல் நிறைவேற்றி, சொன்னதை மட்டுமல்ல சொல்லாததையும் நிறைவேற்றும் மகத்தான அரசாக மக்களின் முழு நம்பிக்கையை பெற்றுள்ளது. நாம் அனைவருக்கும் மகிழ்ச்சி.

இந்த சாதனைகளின் தொடர்ச்சி யாக அடுத்த ஐந்



தாண்டுகளுக்கான வளர்ச்சியை திட்டமிட “திராவிட மாடல்” 2.0’ தயாராகி வருகிறது. வருகிற தேர்தலில் தி.மு.க.அளிக்கும் தேர்தல் அறிக்கை மக்களின் குரலை பிரதிபலிக்கும் வகையில் அமைய வேண்டும் என்று நமது நெஞ்சம் நிறைந்த தலைவர், திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்கள் விரும்புவ தால், மக்களின் எதிர்பார்ப்புகள், கனவுகள் என்ன என்பதை அவர்களின் மூலமே அறிந்து அதற்கேற்ற வகையில், மக்கள் பங்களிப்புடன் தேர்தல் அறிக்கை அமையவேண்டும் என்பதால், கழக துணை பொதுச் செயலாளர், தென் மண்டல தேர்தல் பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் தலைமையிலான கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து மக்களை சந்தித்து நமது மாநில வளர்ச்சிக்கு தேவையான , ஆக்கப் பூர்வமான கோரிக்கைகளை கேட்டு வருகிறார்கள்.

அதன் தொடர்ச்சியாக வருகிற 30.01.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நெல்லை சந்திப்பு, ஆரியாஸ் ஹோட்டலில் உள்ள அபிநயா ஹாலில் நடைபெறும் கூட்டத்தில், நெல்லை மாவட்ட மக்களின் கோரிக்கைகளை கேட்க வருகை தருகிறார்கள்.

நமது மாவட்டத்திற்குட்பட்ட வணிகர் சங்கங்கள், விவசாயிகள் நல சங்கங்கள், நெசவாளர்கள், மீனவர் சங்கங்கள், தொழிற்சங்கங்கள், தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், பொது நல சங்கங்கள், சமூக நல அமைப்புகள், தன்னார்வலர்கள் போன்ற பொது நலனில் அக்கறை கொண்ட அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவரும் இந்த கூட்டத்தில் பங்கேற்று, கழக தேர்தல் அறிக்கையில் இடம்பெறும் வகையில் தமிழ்நாட்டு மக்கள் நலனுக்கும், மாவட்ட வளர்ச்சிக்கும் தேவையான ஆக்கப்பூர்வமான கோரிக்கைகளை தெரிவிக்க வருகை தருமாறு அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ கூறியுள்ளார்.